**Topic:** Reciprocal Health Care Agreements

**Language:**

.

---

M

பின்வரும் தகவலை உங்களுக்கு வழங்குவது **Centrelink.**

M

**[Person 1]:**

**நான் விரைவில் வெளிநாடுக்கு போகிறேன். நான் வெளிநாட்டில் இருக்கும்போது எனக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டால் நான் அதற்காக அங்கு Medicare** அட்டையை **பயன்படுத்தலாமா?**

**[Person 2]:**

இல்லை. நீங்கள் வெளிநாட்டில் Medicare அட்டையைக் காட்டி மருத்துவ சிகிச்சை பெறமுடியாது. ஆனால் Reciprocal Health Care Agreement எனும் முறையின் கீழ், சில மருத்துவ சிகிச்சைகளுக்கு ஆகும் செலவில் நீங்கள் உதவி பெறலாம்.

**[Person 1]:**

அப்படியென்றால் என்ன?

**[Person 2]:**

பெல்ஜியம், பின்லாந்து, இத்தாலி, மால்றா, நியூ சிலந்து, நெதர்லாந்து, அயர்லாந்து குடியரசு, ஸ்லோவேனியா, ஸ்வீடன், ஐக்கிய ராஜ்ஜியம் எனும் நாடுகளுடன் ஆஸ்திரேலியா ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. இதன்படி, இந்த நாடுகளில் நீங்கள் பயணம் செய்யும்போது உங்களுக்கு ஏதேனும் அவசரமாக மருத்துவ சிகிச்சைத் தேவைப்பட்டால் நீங்கள் சலுகை முறையில் சிகிச்சை பெறலாம்.

**[Person 1]:**

**இந்த நாடுகளில் எனக்கு மருத்துவ சிகிச்சைத் தேவைப்பட்டால் நான் என்ன செய்யவேண்டும்?**

**[Person 2]:**

இந்த நாடுகளில் உங்களுக்கு அவசர மருத்து உதவி தேவைப்பட்டால், ஆஸ்திரேலியாவின் Reciprocal Health Care Agreement திட்டத்தின் கீழ் நீங்கள் சிகிச்சைபெற விரும்புவதாக உங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவரிடமோ அல்லது தாதியிடமோ கூறுங்கள். நீங்கள் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக வாழ்கின்றீர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் உங்கள் Medicare அட்டையையோ அல்லது கடவுச்சீட்டையோ காட்டுங்கள்.

**M**

**[Person 1]:**

**Reciprocal Health Care Agreements குறித்த அதிக தகவலை நான் எங்கிருந்து பெறலாம்?**

**[Person 2]:**

இத் திட்டம் குறித்தும், இத்திட்டம் உங்களுக்கு எப்படி உதவமுடியும் என்பது குறித்தும் அதிகமாக அறிந்துகொள்ள:

- **humanservices.gov.au** எனும் இணையதளத்திற்குச் செல்லுங்கள்.
- அல்லது, உங்கள் அருகாமையிலுள்ள Service Centre க்குச் செல்லுங்கள்,
- அல்லது உங்கள் மொழியில் பேசி தகவல் பெற Translating and Interpreting Serviceஐ **131 450** எனும் எண்ணில் அழையுங்கள். ஆம் அந்த எண் **131 450.**

(Spoken quickly, as a disclaimer)

தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனத்தைப் பொறுத்து அழைப்புக்கான கட்டணம் மாறுபடலாம். பொது தொலைபேசியிலிருந்தோ அல்லது கைத் தொலைபேசியிலிருந்தோ அழைத்தால் அதிக கட்டணம் வசூலிக்கப்படலாம்.

**END**